# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:15** **தேதி:15.01.2015**

## BSNLக்கு புதிய CMD- மற்றும் சில மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

இறுதியாக அமைச்சரவையின் நியமனக்குழு **BSNLன் புதிய CMDஆக திரு அனுபம் ஸ்ரீவத்சவா** அவர்களின் பெயருக்கு ஒப்புதல் கொடுத்துள்ளதாக PTIஐ மேற்கோள் காட்டி எகனாமிக் டைம்ஸ் பத்திரிக்கை செய்தி வெளியிட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களுக்கான தேர்வுக் குழு (PSEB) 2013ஆம் ஆண்டிலேயே திரு அனுபவ் ஸ்ரீவத்சவா அவர்களின் பெயரை தெரிவு செய்திருந்தது. ஆனால் அரசியல்வாதிகளால் அவரது நியமனம் காலதாமதம் செய்யப்பட்டது. அதனால் ஒரு முழு நேர CMD இல்லாமல் BSNL பல மாதகாலம் செயல்பட்டது. **இன்று 15.01.2015 அன்று திரு அனுபவ் ஸ்ரீவத்சா அவர்களை BSNLன் CMD ஆக நியமித்து தொலைதொடர்புத் துறை உத்தரவித்து பிறப்பித்தது. அதனை ஏற்று இன்று அவர் BSNLன் புதிய CMD ஆக பொறுப்பேற்றுக் கொண்டார்**. BSNL ஊழியர் சங்கம் அவரை மனதார வரவேற்கிறது.

**01.01.2015 முதல் பஞ்சப்படி உயர்ந்தது:-** விலைவாசிப்புள்ளிகள் உயர்ந்துள்ள காரணத்தால் 01.01.2015 முதல் 2.2% பஞ்சப்படி உயர்ந்து நமக்கான IDA 100.3 சதவிகிதமாக வழங்கப்படும். அதற்கான கார்ப்பரேட் அலுவலக உத்தரவு எண்:14-1/2012-(PAT)BSNL dated 14.01.2015.

**லாபத்தை நோக்கி திரும்பியுள்ளது ஏர் இந்தியா நிறுவனம்:-** பல ஆண்டுகளாக ஏர் இந்தியா நிறுவனம் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. உண்மையில் சொல்வதென்றால், பொதுத்துறை நிறுவனங்களின் செயல்திறன் இன்மைக்கு உதாரணமாக ஏர் இந்தியா நிறுவனத்தையே உதாரணம் காட்டி வந்தனர். தற்போது அந்த நிறுவனம் லாபத்தை அடைந்துள்ளது. PTI நிறுவனம் 12.01.2015 அன்று வெளியிட்டுள்ள ஒரு செய்தியின் படி டிசம்பர் 2014ல் ஏர் இந்தியா நிறுவனம் 14.6 கோடி ரூபாய்களை லாபமாக ஈட்டியுள்ளது. புத்தாக்கத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் BSNLக்கும் இது ஒரு மகிழ்ச்சியான செய்தி. ஏர் இந்தியா நிறுவனத்தை லாபமீட்டக்கூடிய நிறுவனமாக மாற்ற முடியும் என்றால் BSNL நிறுவனத்தை ஏன் மாற்ற முடியாது?

**சிம் கார்ட் பற்றாக்குறை தொடர்பாக நமது மத்திய சங்கம்**:- தமிழகம், கேரளா மற்றும் மகராஷ்ட்ரா உள்ளிட்ட மாநிலங்களில் ஏற்பட்டுள்ள சிம்கார்ட் பற்றாக்குறை தொடர்பாக நமது மத்திய சங்கம் 15.12.2014 மற்றும் 30.12.2014 ஆகிய நாட்களில் இரண்டு கடிதங்களை கொடுத்திருந்தது. ஆனாலும் பிரச்சனை தீராததால் 12.01.2015 அன்று BSNLன் CMDக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டது. 13.01.2015 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் துணை பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி அவர்கள் DIRECTOR(CM) அவர்களை சந்தித்து BSNLக்கு ஏற்பட்டு வரும் வருவாய் இழப்பை சுட்டிக்காட்டி பேசியுள்ளார். தற்போது கேரளாவில் சுற்றுப்பயணம் செய்து வரும் CMDயிடம் இது தொடர்பாக விவாதிப்பதாக அவர் உறுதி அளித்துள்ளார்.

**GPF மற்றும் பண்டிகைக் கால முன்பணம்:-** கடந்த மாதம் தமிழகம் உள்ளிட்ட பல மாநிலங்களில் ERP அமுலாக்கம் காரணமாக GPF மற்றும் பண்டிகைக் கால முன்பணம் வழங்கப்படவில்லை. இது தமிழர்களின் திருவிழாவான பொங்கலை ஒட்டி இவற்றை இந்த ஜனவரி மாதத்திலாவது விரைவாக தரப்பட வேண்டும் என நமது மத்திய சங்கம் பலமுறை

நிர்வாகத்தை சந்தித்து வலியுறுத்தி உள்ளது. BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 12.01.2015 அன்று GM(CA) திரு ராஜிவ் சிங் அவர்களை சந்தித்து நிதியினை மாநிலங்களுக்கு விரைவில் தர வேண்டும் என வலியுறுத்தினார். ஆயினும் போதுமான நிதியில்லாத காரணத்தால் மாநிலங்களுக்கு பிரித்து தர இயலவில்லை என அவர் கூறியுள்ளார். எனினும் தேவையானவற்றை செய்வதாக உறுதி அளித்தார். ஆனாலும் 13.01.2015 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்ட GPF முன்பணத்திற்கான நிதி கார்ப்பரேட் அலுவலகத்தில் பணம் இல்லாத காரணத்தால் ஒதுக்கப்படவில்லை. விரைவில் இதனை பெற மத்திய சங்கம் தொடர் முயற்சி எடுத்து வருகிறது.

**கேடர் பெயர் மாற்றக் குழு:-** கேடர் பெயர் மாற்றக் குழுவின் கூட்டம் 09.01.2015 அன்று நடைபெற்றது. அதில் ஊழியர் தரப்பின் சார்பாக தோழர் P.அபிமன்யு GS., BSNLEU, தோழர் பல்பீர்சிங் President, BSNLEU, தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி Dy.GS., BSNLEU, தோழர் சந்தேஸ்வர் சிங் GS, NFTE, தோழர் மஹாபீர் சிங் NFTE ஆகியோரும் நிர்வாகத்தின் சார்பில் திரு ஷமீம் அக்தர் Sr.GM(SR), திரு மது அரோரா Sr.GM(Restg) மற்றும் திரு R.K.கோயல் GM(Estt) ஆகியோர் கலந்துக் கொண்டனர். Sr.TOA கேடர் பெயர் மாற்றம் தொடர்பான விவாதம் தொடர்ந்தது. “ASSOCIATE OFFICER”, “MANAGER” “EXECUTIVE” பெயர்களை Sr.TOAக்களுக்கு வழங்க நிர்வாகம் தயாரில்லாத சூழ்நிலையில் நாம் “SUPERINTENDENT” என்ற பெயரை முன்மொழிந்தோம். 09.01.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிர்வாகம் அந்த பெயரையும் வழங்க இயலாது என தெரிவித்தனர். குறிப்பாக இந்தக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் SR.TOAக்களுக்கு “SUPERINTENDENT” என்ற பெயரை தான் ஏற்றுக் கொள்ள முடியாது என திரு R.K.கோயல் GM(Estt) உறுதியாக தெரிவித்தார். அவ்வாறு அந்தக் கூட்டம் எந்த ஒரு முடிவும் எட்டப்படாமல் முடிவுக்கு வந்தது.

**மனித வளம் தொடர்பான விவாதம்:-** 09.01.2015 அன்று நடைபெற்ற பெயர் மாற்றக் குழுவின் கூட்டத்திற்கு பின் நிர்வாகம் முன்மொழியப் பட்டுள்ள மனித வள திட்டம் தொடர்பாக ஒரு விவாதத்தினை நடத்தியது. ஊழியர் அளவீடு தொடர்பாக டிலாய்ட்டி கமிட்டியின் பரிந்துரைகளை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளாததற்கு நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் நிர்வாகத்தை பாராட்டினார். ஊழியர்களின் மற்றும் JTO, JAOக்களின் எண்ணிக்கைகளை குறைக்கும் முன்மொழிவை BSNL ஊழியர் சங்க பிரதிநிதிகள் கடுமையாக எதிர்த்துள்ளனர். மேலும், ஊழியர்களாலேயே செய்யப் படக் கூடிய நிறுவனத்தின் பல பணிகளை OUTSOURCING செய்யும் நிர்வாகத்தை விமர்சித்தனர். BSNL ஊழியர் சங்கத்தின் கருத்துக்களை ஓரிரு தினங்களில் தருவாதாக அவர்கள் நிர்வாகத்திடம் கூறியுள்ளனர்.

**26.02.2015 அன்று மத்திய செயலகக் கூட்டம்:-** மத்திய சங்க நிர்வாகிகளை உள்ளடக்கிய மத்திய செயலகக் கூட்டம் 26.02.2015 அன்று நடைபெறும் என நமது மத்திய சங்கம் அறிவித்துள்ளது. 25.02.2015 அன்று நடைபெற உள்ள பாராளுமன்றத்தை நோக்கிய பேரணிக்கான தயாரிப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தோழர்களை கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**